# புதுச்சேரியில் மீண்டும் 'பெலிகான்' நிறுவனம் துவக்கம்

**புதுச்சேரி, ஆக. 4–**

பாண்டிச்சேரி எலக்ட்ரானிக்ஸ் எனப்படும் புதுச்சேரி அரசின் 'பெலிகான்' நிறுவனம் மறுசீரமைப்பு செய்யப்பட்டு, புதுப்பொலிவுடன் துவங்கப்பட்டு உள்ளது.

இதுகுறித்து பிப்டிக் நிறுவன மேலாண் இயக்குனர் சத்தியமூர்த்தி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

பிப்டிக் நிறுவனத்தின் துணை நிறுவனமாக, பாண்டிச்சேரி எலக்ட்ரானிக்ஸ் (பெலிகான்) கடந்த 1982ம் ஆண்டு துவங்கப்பட்டது.

புதுச்சேரி மக்களுக்கு கலர் மற்றும் பிளாக் அண்ட் ஒயிட் டி.வி., ரேடியோ போன்ற பொருட்களை தயாரித்து மிகக்குறைந்த விலையில், தவணை முறையில் கொடுத்து வந்தது.

மேலும், தேர்தல் துறையின் வாக்காளர் அடையாள அட்டை, தேர்தல் சம்பந்தமான மென்பொருட்களை தயாரித்து புதுச்சேரி அரசுக்கு வழங்கியது. அரசு பள்ளிகளுக்கு கணினி பொருட்களை வழங்கி கணினி கல்விக்கு உதவியது.

கடந்த சில ஆண்டுகளாக, பெலிகான் நிறுவனம், நிர்வாகம் மற்றும் பொருளாதார சிக்கல்களால் நடைபெறாமல் இருந்தது.

இதையடுத்து, அமைச்சர் நமச்சிவாயம் அறிவுறுத்தலின்பேரில், பெலிகான் நிறுவனம் மறுசீரமைப்பு செய்யப்பட்டு, தற்போது துவங்கப்பட்டு உள்ளது.

பெலிகான் நிறுவனமானது, வரும் காலத்தில் மாநிலம் முழுவதும் 'கோர் நெட்' (Core-Net) என்ற திட்டத்தின் மூலம், இண்டர்நெட், தொலைபேசி மற்றும் தொலைக்காட்சி தொடர்புகளை ஒவ்வொரு வீட்டிற்கும் குறைந்த விலையில், எளிய முறையில் அளிக்க உள்ளது.

இப்பணியை, புதுச்சேரி அரசின் தகவல் தொழில்நுட்பத் துறை, இதர அரசு துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படும்.

அதேபோல், தொழிற்சாலைகளுக்கும் இந்த சேவைகளை விரிவுபடுத்த உத்தேசித்துள்ளது.

இதன் மூலம் புதுச்சேரி மாநிலத்தில் தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் அமைத்து, தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அதிக அளவில் துவங்க வசதிகள் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளும் கிடைக்கும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### அரசு நிறுவனமான 'பெலிகான்' மூலம்

# குறைந்த கட்டணத்தில் இணையதள சேவை

## பிப்டிக் அதிகாரி தகவல்

புதுச்சேரி, ஆக.4-

அரசு நிறுவனமான பெலிகான் மூலம் குறைந்த கட்டணத்தில் இணையதள சேவை, டி.வி. தொலைபேசி தொடர்புகள் வழங்கப்பட உள்ளது.

புதுச்சேரி அரசு நிறுவனமான பிப்டிக் மேலாண் இயக்குனர் சத்தியமூர்த்தி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

### பெலிகான் நிறுவனம்

புதுவை பிப்டிக் நிறுவனத்தின் துணை நிறுவனமான, பாண்டிச்சேரி எலக்ட்ரானிக்ஸ் (பெலிகான்) 1982-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த நிறுவனத்தின் மூலம் புதுவை மக்களுக்கு கருப்பு-வெள்ளை டி.வி., ரேடியோ, கலர் டி.வி. போன்ற பொருட்களை தயாரித்து மிகக்குறைந்த விலையில் தவணை முறையில் வழங்கப்பட்டது.

தேர்தல் துறையின் வாக்காளர் அடையாள அட்டை, தேர்தல் சம்பந்தமான மென்பொருட்களை தயாரித்து புதுவை அரசுக்கு வழங்கியது. மேலும் உள்ளாட்சித்துறை தேர்தலுக்கும் மென்பொருட்களை வழங்கியது.

### 'கோர் நெட்' சேவை

இந்தநிலையில் கடந்த சில ஆண்டுகளாக பெலிகான் நிறுவனம் நிர்வாகம், பொருளாதார சிக்கல்களால் நடைபெறாமல் இருந்தது. தொழில்துறை அமைச்சர் நமச்சிவாயம் அறிவுறுத்தலின் பேரில் பெலிகான் நிறுவனம் மறுசீரமைத்து புதுப்பொலிவுடன் தொடங்கப்பட்டு உள்ளது.

பெலிகான் நிறுவனமானது வரும் காலங்களில் புதுவை அரசின் தகவல் தொழில்நுட்பத் துறை, இதர அரசு துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களுடன் இணைந்து புதுவை மாநிலம் முழுவதும் 'கோர் நெட்' என்னும் திட்டத்தின் மூலம் இணையதள சேவை, தொலைபேசி மற்றும் தொலைக்காட்சி தொடர்புகளை ஒவ்வொரு வீட்டிற்கும் குறைந்த கட்டணத்தில் அளிக்க உள்ளது.

### இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு

அதேபோல் தொழிற்சாலைகளுக்கும் இந்த சேவைகளை விரிவுபடுத்த உத்தேசித்து உள்ளது. இதன் மூலம் புதுவை மாநிலத்தில் தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் அமைத்து தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அதிகளவில் தொடங்க வசதிகள் ஏற்படுத்தப்படும்.

மேலும் மாநிலத்தில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளும், அதிக வருவாயும் கிடைக்கும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

